## <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை</u>

## <u>OS.No.9/2020</u>

Date: 12.03.2026 PW.3 (அடைக்கலம்)

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை :</u>**

நான் சாட்சி சொல்லவதற்காக எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 ஆவணத்திலுள்ள இடத்தில் சுற்றுசுவர் எத்தனை அடிக்கு எவ்வளவு செலவில் கட்டினேன் என்றால் முதலில் கட்டிடம் கட்டினேன் அதன்பின்பு சுற்றுச்சுவர் சுமார் 35 அடிக்கு கட்டினேன். அதற்கு சுமார் ரூபாய் 1.25 லட்சம் செலவானது. மேற்படி கட்டிடம் கட்டுவதற்காக வாதி லெட்சுமண பெருமாளிடம் கூலிக்காக ஒப்பந்தம் போட்டோம். அந்த ஒப்பந்தத்தை எந்த பேப்பரில் எழுதினோம் என்றால் வெள்ளைப்பேப்பரில் எழுதினோம். முத்திரை தாளில் எழுதவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 ஒப்பந்தம் நானும் லெட்சுமண பெருமாள் என்பவரும் செய்து கொண்ட ஒப்பந்தம் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி ஒப்பந்தத்தில் என் பெயரும் முகவரியும் மற்றும் வாதி லெட்சுமண பெருமாள் என்பவரின் பெயரும் முகவரியும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேலும் மேற்படி ஒப்பந்தம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று வா.சா.ஆ.10 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.10 ஒப்பந்தத்தை யார் எழுதினார்கள் எப்போது எழுதினார்கள் என்றும் அவர்கள் பெயரும் முகவரியும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாதி லெட்சுமண பெருமாள் கட்டிடம் கட்டுவதற்கு கூலியாக பணமாகவா அல்லது காசோலையாக கொடுத்தாரா என்றால் பணமாகத்தான் கொடுத்தார். மேற்படி கூலியை எப்போது கொடுத்தார் என்றால் தேதி குறிப்பிட்டு சொல்ல எனக்கு ஞாபகமில்லை. தார்சு கட்டிடம் மற்றும் அதனை சுற்றியுள்ள சுற்றுச்சுவர் ஆகியவற்றை எவ்வளவு நாட்கள் கட்டினேன் என்றால் சுமார் 3 மாதத்தில் கட்டினேன். நான் கட்டிடம்

கட்டுவதற்காக தொழில் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் தொழில் வரி கட்டுகிறேனா என்றால் இல்லை. நான் கட்டிடம் கட்டும் வேலை பார்க்கவில்லை என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.ஆ.10 ஆவணம் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>**:** இல்லை

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:28:39 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை